புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2025** **21 ஏப்ரல் 2025**

# இரங்கல் செய்தி

கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் உடல் நலக்குறைவால் காலமானார் என்ற செய்தி மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

போப் பிரான்சிஸ், கடந்த 12 ஆண்டுகளாக கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்தி வந்தவர். மக்கள் சேவையில் தொடர்ந்து தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். உலகில் நடந்து வரும் போர்களுக்கு எதிராக குரல் கொடுத்து உலக சமாதானத்தை விரும்பியவர்.

கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் உலகம் எங்கும் உள்ள மக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர்.

அவரை இழந்து வாடும் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆன்மா அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

K. கைலாஷ்நாதன்
துணைநிலை ஆளுநர், புதுச்சேரி